# நிழலின் தனிமை புதினத்தில் மொழிநடை

***கோ. புவனா***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***முனைவர் ஊ. லிட்டில் பிளவர்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

https://doi.org/10.5281/zenodo.15526541

**முன்னுரை**

*மொழிநடை என்பது மக்களை இனங்காண்பதற்கும் மக்களின் கருத்து பரிமாற்றத்திற்கும் பயன்படுகின்ற ஒரு கருவியாகும். இம்மொழியானது, வட்டாரத்துக்கு வட்டாரம் இனத்துக்கு இனம் வேறுபடுகின்றது. அதாவது ஒரு பகுதியில் வசிக்கின்ற மக்கள் தமிழ் மொழியில் பேசினாலும் அதை ஒரு விதமாகவும், மற்றொரு பகுதியினர் அதே மொழியை வேறு விதமாகவும் பேசுவதை நம் கண்கூட காண்கின்றோம். இப்படிப்பட்ட சுழலில் ஒரு வட்டாரத்தை பற்றிய கதைக் கருவைப் படைப்பாளி அவர்கள் நடையில் காட்சிப்படுத்தும் போது மக்களின் மரபு சார்ந்த பழக்கவழக்கங்களை அறிந்து கொள்ள முடியுமா என்ற சிக்கல்கள் எழுகின்றன. மொழிநடை என்பது படைப்பாளன் தம் படைப்பில் கையாளும் எழுத்து நடை, பேச்சு நடை, இவற்றைக் குறிக்கும். கதை கூறும் எழுத்து நடை, கதை மாந்தர் உரையாடும் பேச்சு நடை, இரண்டும் ஒரு நாவலின் இரு கால்கள் என்று கூறலாம், நடை என்பது ஒரு ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்தவல்லது நடை என்பது காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், இனத்திற்கு இனம் மாறுபடும் தன்மையுடையது. அவ்வகையில் தேவி பாரதியின் தனிமை நிழல் என்னும் புதினத்தில் காணப்படும் மொழிநடையினை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.*

**மொழி நடையின் இயல்பு**

*மொழிநடையின் இயல்பு ஒரு படைப்பின் ஆணிவேராக அமைந்திருக்கும் நடையானது வாசகர்களுக்கு எளிதில் புரியும்படி இயல்பானதாக அமைய வேண்டும் இந்நடையானது,*

> **"தேம்ஸ் ஆற்றின் ஓட்டம் போல் தெரியும் மென்மையும் வன்மையும் பெற்று விளங்க வேண்டும்"[1]**

*என்பார் ஜாண்டன்கான். ஜோசப் ஸ்வர்ண ராஜ் கூறும்போது,*

> **"படைப்பின் தொடக்கம் முதல் எழுதி வரை இடையுறவு ஏற்படா வண்ணம் சங்கிலித் தொடர் போல் அமைந்து கூற நினைத்த எல்லாவற்றையும் இணைத்து வாசகர்கள் மத்தியில் பதியும் வண்ணம் நடை அமைய வேண்டும்"[2]**

*என்பார் ஒரு படைப்பாளி தனது கலைப்படைப்பு மூலம் தன்னையே புற உலகுக்கு அளிக்கின்றான். எனவே, அப்படைப்பின் சிறப்பான நடை அழகிற்கு அவனது அக உணர்வுகளும் அடிப்படை காரணமாக அமையும் பின்புலமும் முக்கிய காரணிகளாக அமைகின்றன.*

**"படைப்பாளனின் உள்ளத்தில் தெளிவு இருந்தால் நடையில் எளிமை விளங்கும் அவருடைய உள்ளத்தில் கலக்கமும் குழப்பமும் இருந்தால் நடையில் சிக்கலும் தடுமாற்றமும் காணப்படுகிறது."**[3]

என்பார் மு வரதராசனார். எனவே, ஒரு படைப்பாளன் நடை படைப்பாளனின் மனநிலையைப் பொறுத்து அமைகின்றது என்பது தெளிவாகின்றது.

## மொழி நடையின் வகைகள்

வட்டார நாவல்களின் மொழிநடையினை அந்நாவல்களின் பின்புலங்கள் தீர்மானிக்கின்றன. இத்தகைய நடையின் வகைகளாக

1. தர்க்க முறை
2. திறனாய்வு முறை
3. வர்ணனை முறை
4. நாடக முறை
5. எடுத்துரைமுறை
6. சொற்பொழிவு முறை
7. தத்துவ முறை
8. எள்ளல் முறை

என்பன என்று குறிப்பிடுகின்றார் சுந்தரமூர்த்தி.

## படைப்பாளியும் மொழிநடையும்

ஒவ்வொரு மனிதனுடைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் அவரவருக்கே உரிய தனித்தன்மைகளுடன் விளங்குகின்றன. அதேபோன்று, அவர்களுடைய மொழிநடையும் தனித்தன்மை பெறுகின்றன.

**"நடை படைப்பாளனுடைய மனதின் பண்புகளோடு தொடர்பு கொண்டதாக அமைகின்றது. எனவேதான், நடையை ஆசிரியருடைய உள்ளத்தில் சொல்லோவியம் என்று குணத்தை அறியும் கலை."**[4]

என்று கூறுகின்றார் டி எஸ் சோமசுந்தரம்.

நடை அதன் உரிமையாளனான கலைஞனை வாசகருக்கு உணர்த்தி விடுகின்றது. இதுவரை வெளியாகாத சாண்டில்யன் அல்லது அகிலன் கதை வேறொருவரின் பெயரில் வெளியானாலும் அவர்களது எழுத்தின்பால் அனுபவமுள்ளவர்கள் அதை இன்னாருவருடைய நடை என எளிதில் இனம் காண இயலும். நடைக்கும் படைப்பாளிக்கும் உள்ள உறவைக் கூற வந்த கார்லைஸ்

**"நடை என்பது எழுத்தாளனின் உடலுடன் ஒட்டிய தோல்"**[5]

என்று கூறுகிறார். ஜோசப் சொர்ண ராஜ். எனவே, நடை என்பது கலைஞனின் உள்ளப் பண்போடு இணைந்த ஒன்று என்பது தெளிவாகின்றது.

## வட்டார நாவல்களின் மொழிநடை

வட்டார நாவல்கள் பின்புலத்துடன் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பு அதன் நடையின் மாற்றத்திற்கு வழி கூறுகின்றது. நாவலாசிரியர்கள் எந்த இனத்தினரை எத்தகைய வட்டார மொழியின் பின்புலமாகக் கொண்டு நாவலைப் படைக்கின்றனோ அவ்வினத்தவரின் இன மொழியும் இடம்பெறுகின்றது. தனித்தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டுவது போன்று, வட்டார நாவலாசிரியர்கள் தங்கள் கதை அமைப்பு சிறக்க வேண்டும் எதார்த்தம் வளர வேண்டும் என்ற நோக்கில் கதைக்குப் பின்புலமாகக் கொண்ட இடத்தில் வழங்கும் நாட்டுப்புற பாடல்களையும் பழமொழிகளையும் உவமைத் தொடர்களையும் அதிகமாகக் கையாளுகின்றனர்.

## ஒலிக் குறிப்பு

ஒரு நிகழ்வு அல்லது பொருளை விளக்க, அதன் ஒலியைக் குறிக்கும் சொற்களைப் பயன்படுத்துகிறோம். இந்தச் சொற்கள், அந்த நிகழ்வு அல்லது பொருளின் ஒலியோடு பொருந்தியிருக்கும். ஒலிக் குறிப்புகளை தேவி பாரதி தம்முடைய படைப்பில் பயன்படுத்துகின்றார்.

**"உதவித் தலைமையாசிரியரும் உடற்கல்வி ஆசிரியரும் எனது பீரோவைத் திறந்து அதிலிருந்து முக்கியமான எல்லா கோப்புகளையும் வெளியில எடுத்து போட்டு எதையோ தேடிக் கொண்டிருந்ததாக என் செவிகளுக்குள் கிசுகிசுத்தார் அவர்"**

(நி. த. ப -38)

என்ற வாக்கியங்களில் "கிசுகிசுத்தார்" என்னும் ஒலிக் குறிப்பினை ஆசிரியர் பயன்படுத்துகின்றார்.

**கௌதமன் சீழ்க்கையடித்துக் கொண்டே காரை வேகமாகச் செலுத்தினான். (நி. த. ப -62)**

என்பதில் சீழ்க்கை எனும் ஒலிக் குறிப்பினைப் பயன்படுத்தியுள்ளார். உடுக்கையில் இருந்து எழுந்த ஒலியினைக் குறிப்பிடுகையில்,

**"கயிறை மெட்டி பிடித்துக் கொண்டு விரல்களால் லேசாக தட்டிய போது பம்பமென்று எழுந்தது." (நி.த ப-65)**

என்ற வரிகளின் மூலம் எடுத்தியம்புகிறார்.

**ஓகாரப் பயன்பாடு**

மொழிநடையில் "ஓ" என்ற எழுத்து இறுதியில் அமைய விளக்கத்திற்கு வருவதுண்டு.

**"நான் வேறு எதற்காகவோ அல்லது காரணம் இல்லாமல் சும்மா அந்த பக்கம் வந்து சுற்றிக் கொண்டிருப்பதாக நினைத்தோ என்னவோ வின்செண்ட் இல்லாமல் போர் அடிக்குதா? என கேட்டு சிரித்தார்." (நி.த.ப -13**

ஐயப்பாடு வந்ததும் "ஓ" என்ற எழுத்தை அடுத்து தெளிவற்ற நிலையைப் புலப்படுத்துகிறார். ஓகாரம் ஐயப்பாட்டை விளக்கி நின்றது.

**இரட்டைக் கிளவி**

இரட்டைக்கிளவி பெரும்பாலும் ஒரு பொருளின் தன்மை, குணம், அல்லது ஓசையை வெளிப்படுத்த பயன்படுத்தப்படுகிறது. இது சொற்கள் அல்லது சொற்றொடர்களை இரட்டித்து, ஒரு குறிப்பிட்ட பொருளை வலியுறுத்த அல்லது உணர்த்த பயன்படுத்தப்படுகிறது. இரட்டைக்கிளவி என்பது இரட்டைச் சொற்களாய்ச் சேர்ந்து ஒரு தன்மைப்பட்டு நின்று, வினைக்கு அடைமொழியாய்க் குறிப்புப் பொருள் உணர்த்தி வருவதாகும். இது இரட்டைச் சொல்லாகவே வரும். பிரித்தால் பொருள் தராது. இத்தகைய இரட்டைக்கிளவி சொற்களை ஆசிரியர் நாவலின் பல இடங்களில் பயன்படுத்துகின்றார்.

**"நாளைக்கு நமக்கு சப்போர்ட் பண்ணுவாங்க என கிசுகிசுத்தப்படி இடுப்பை ஒரு கிள்ளு கிள்ளி விட்டு மறைந்தாள்" (நி.த.ப -63)**

என்ற வரிகளிலும்,

**"பிறகு இருவரும் தங்களுக்குள் குசு குசுத்தபடி இழந்து எதற்காகவோ காட்டுக்குள் சென்றனர்." (நி.த.ப-70)**

**"பிறகு எந்த குறுக்கீடும் இல்லாமல் வருடங்களாக எனக்குள் தழும்பி கிடந்த பழியின் கொழகொழப்பான திரவத்தால் அவளது உடலை நிரப்பிவிட்டு எழுந்து" (நி.த.ப -73)**

**"தன் உடைந்த குரலால் பரிதாபமாக முணுமுணுத்தாள்." (நி.த.ப -73)**

**"நான்காக மடிக்கப்பட்ட அக்கடித உரையிலிருந்து பொலபொலவென உதிர்ந்தன அஞ்சல் வில்லைகள்." (நி.த.ப -147)**

என்ற வரிகளின் மூலமும் ஆசிரியர் இரட்டைக் கிளவிகளைப் பயன்படுத்தியுள்ளார் என்பதனை அறிய முடிகின்றது.

**எண்ணும்மை**

எண்ணும்மை என்பது, இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சொற்கள் "உம்" என்ற விகுதியுடன் இணைந்தால் அது எண்ணும்மை ஆகும். "உம்" விகுதி வெளிப்படையாக வருவதால், எண்ணும்மை ஆகும்.

ஆசிரியர் எண்ணுமையால் வாக்கியத்தை இணைப்பதனை, "என் ஆறுதலை வேண்டித் ததும்பிக் கொண்டிருந்த அச்சிறு பெண்ணின் கண்களைச் சந்திக்க முடியாதவனாகவும் வியர்வை மண்டிய முகத்தின் மீது தாறுமாறாகப் படிந்து கிடந்த கேசத்தை ஒழுங்குபடுத்த சக்தி அற்றவனாகவும் கன்றி போயிருந்த அவளது கன்னங்களில் மிருதுவான முத்தம் ஒன்றை தருவதற்குத் துணிவற்றவனாகவும் நிலைகுலைந்து கிடந்த தருணத்தில் தான் மிகப் பயங்கரமான அந்தக் கூக்குரலைக் கேட்டேன்." (நி.த. பக்-73-74) என்ற வாக்கியங்களின் மூலம் ஆசிரியர் எண்ணும்மையைப் பயன்படுத்தியிருப்பதனை அறிய முடிகின்றது.

### எதுகையும் மோனையும்

*எதுகை என்பது, ஒரு செய்யுளில், அடுத்தடுத்த சீர்கள் அல்லது அடிகளின் இரண்டாம் எழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்து வருவது. மோனை என்பது, ஒரு செய்யுளில், அடுத்தடுத்த சீர்கள் அல்லது அடிகளின் முதல் எழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்து வருவது.*

***"கண்ணாடியிலோ என் கண்களிலோ ஏதாவது கோளாறு ஏற்பட்டு விட்டதோ என நினைத்தேன்."***

***(நி.து.ப -146)***

***"எங்குளுக்கு சொத்துப் பத்தும் பேருலயெல்லா ஆசையில்ல."***

***(நி.து.ப -79)***

*ஆசிரியர் எதுகை, மோனை போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளார்.*

### பேச்சு நடை

*இது ஒரு பொதுவான அல்லது சாதாரண பேச்சு நடை ஆகும். இதில் இலக்கணப் பிழைகள் இல்லாமல், எளிமையான சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.*

*பேச்சு நடை ஒருவரின் தனித்தன்மையை வெளிப்படுத்தும்.*

*பேச்சு நடை, உரையாடலின் நோக்கத்தை தீர்மானிக்கிறது.*

*பேச்சு நடை, பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கிறது.*

*சாதாரண மக்களின் பேச்சு நடையை தம்முடைய எழுத்துக்களில் பதிவு செய்கின்றார்.*

***"அப்பிடியென்ன அவசரம், அதும் இன்னாரத்துல? நீ பொறப்புடு சொல்றெ. என்ன அண்ணனுக்குப் பொண்ணு கிண்ணு வந்துருக்குதா?"***

***(நி. து. ப -51)***

*என்றும்*

***"இன்னும் நா கொஞ்சம் தெம்போடதே இருக்கறெ. சனம் ஆயரஞ் சொல்லுட்டு. நா அவனக் கையுட மாண்டெ"***

***(நி. து. பக்-82-83)***

*என்றும் பேச்சு நடை வழக்குகளை தன்னுடைய புதினத்தில் பல்வேறு இடங்களில் ஆசிரியர் கையாண்டுள்ளார்.*

### இடைக்கோடுயிடல்

*இடைக்கோடு இடல் என்பது, சொற்களை இணைப்பதற்கும், சொற்களை பிரிப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு முறைஇடைக்கோடு இடல், சொற்களைத் தெளிவாகவும், இலகுவாகவும் பிரிப்பதற்கும், இணைப்பதற்கும் உதவுகிறது. ஆங்கில மொழி நடையில்*I&Sõ|ö *என்று ஒரு சொல் ஆங்கில நடையில் உள்ளது. வாக்கிய அமைப்பில் இடையிடையே சிறு கோடுகள் அமைத்து விளக்கம் தந்து நிகழ்ச்சியைக் காட்சிப்படுத்துவதற்கு இம்மாதிரியான ஒரு போக்கினைப் பின்பற்றுவதுண்டு.*

***"மகன் - அவனது பெயர் கௌதமன் எனப் பெயர் பிறகு அறிந்து கொண்டேன் - நேராக அலுவலக அறைக்கு வருவான்." (நி. து. ப -43)***

***"மீண்டும் ஒருமுறை எல்லாவற்றையும் - தொடங்கியது முதல் அன்று வரையிலான எங்கள் பழியின் கதையை - நினைவு கூறத் தொடங்கினாள்." (நி. து. ப -82)***

***"அந்தத் தொடர்பு பல மாதங்கள் - நான் மறுபடியும் சுலவை சந்திக்கும் வரை - நீடித்துக் கொண்டிருந்தது." (நி. து. ப -100)***

*என்ற வாக்கியத்தில் அமைந்த நடுக்கோடுகள் விளக்கத்தைக் கூறினாலும், ஒன்றன் பின் ஒன்றாக ஒழுங்குமுறைப் படி கூற வேண்டும் என்பதால் ஒழுங்கு முறையைக் குறிக்க குறியீடாக இடைக்கோடுகள்* (I&Sõ|ö) *வந்துள்ளன.*

### பழமொழிப் பயன்பாடு

*பொதுமக்களின் உள்ளங்களில் வழி வழியாக சொல்லப்பட்டு மனதில் பதிந்த பழமொழிகள் பேசும்போது பொருத்தமான இடத்தில், பொருத்தமான பழமொழி தான் வெளிப்படும். பழமொழி வழங்கும் சுழலில் சொல்ல வந்த கருத்தை விளக்குதற்குப் பயன்படும் பழமொழிகள் எல்லோருக்கும் பொதுவானது. அதை உருவாக்கியவர் யார் என்று யாருக்கும் தெரியாது என்றாலும், காலங்காலமாக மனிதர்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.*

***"ஆணெ படுத்தாலு குதிரெ மட்டந்தேன்னு எவனுக்குப் புரியப் போவுது சொல்லுங்கொ?"***

*(நி.த.ப-82)*

*என்று பழமொழியைப் பயன்படுத்துவதனை அறிய முடிகின்றது.*

**தோற்ற வருணனை**

*தோற்ற வருணனை என்பது ஒரு பொருளின் அல்லது ஒருவரின் தோற்றத்தை விவரிக்க பயன்படும் ஒரு சொல். இது இலக்கியம், கலை, மற்றும் பிற துறைகளில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு பொருளின் அல்லது ஒருவரின் தோற்றத்தை, உருவம், நிறம், அளவு, வடிவம், மற்றும் பிற பண்புகளை விவரிப்பதன் மூலம் தோற்ற வருணனை செய்யப்படுகிறது.*

***"ஒழுங்கற்ற பல்வரிசை தெரிய என் முன் வந்து நின்ற குலைந்து போன உடலையுடைய நடுத்தர வயதைக் கொண்டிருந்த பெண்ணும் அவளுக்கு நேர் எதிரான தோற்றம் கொண்ட இளம் பெண்ணும் ஆசாரத்திலிருந்து என்னைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்."***

*(நி. த. ப -40)*

***"பேதமையின் கடலில் நீந்தி கொண்டிருந்த துடுப்புகளை போன்ற தன் அறிய விழிகளால் என்னை ஆராய்ந்தால் அவளது அழகை நேருக்கு நேர் சந்திக்கும் துணிச்சலற்ற கண்களை உடையவனாகவும் நான் மௌனமாக நின்றேன்."***

*(நி. த. ப -41)*

***"தாயிடமிருந்து ஒழுங்கற்ற பல்வரிசையின் தந்தையிடமிருந்து வேட்கை நிரம்பிய கண்களையும் விடைத்து ராசியையும் திடமான சரீரத்தையும் பெற்றுக் கொண்டவனாக தோற்றமளித்தான்."***

*(நி. த. ப-41)*

*என்ற வரிகளின் மூலம் ஒவ்வொருவரின் தோற்ற வர்ணனையை ஆசிரியர் குறிப்பிடுவதனை அறிய முடிகிறது.*

**வர்ணனை நடை**

*வருணனை நடை, வாசகர்களுக்கு அந்த நிகழ்வை நேரில் காண்பது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்தும் வகையில் எழுதப்படுகிறது.*

*வருணனை நடையில், உவமைகள், உருவகங்கள், சொற்றொடர்கள் போன்றவற்றை பயன்படுத்துவது, வருணனையை மேலும் ஆழமாக்குகிறது.*

*வருணனை நடை, எழுத்தாளரின் படைப்புத் திறனை வெளிப்படுத்தும் ஒரு வழியாகவும் பார்க்கப்படுகிறது.*

*வருணனை நடை, பெரும்பாலும் இலக்கிய நூல்களில் இடம்பெறுகிறது.*

*பொதுவாக "எழுத்தோவியம்" என்று குறிப்பிடப்படும் வருணனை, பெரும்பாலும் ஒரு பொருளை அழகாக விவரிப்பதாகக் கருதப்படுகிறது.*

*நாவல்களிலும், கவிதைகளிலும், இயற்கை அழகை விவரிக்கும் போது வருணனை நடை பயன்படுத்தப்படுகிறது.*

*ஒரு நாவலில் ஒரு பாத்திரத்தை விவரிக்கும் போது, வருணனை நடை பயன்படுத்தப்படுகிறது.*

*ஒரு கதையின் சுழ்நிலையை விவரிக்கும் போது வருணனை நடை பயன்படுத்தப்படுகிறது.*

*வருணனை நடை, வாசகர்களுக்கு ஒரு பொருளைப் பற்றிய ஒரு தெளிவான, துல்லியமான அனுமானத்தை அளிக்கிறது.*

*வருணனை நடை, கதையை மேலும் ஆழமாக்குகிறது, வாசகர்கள் கதையுடன் மேலும் தொடர்பு கொள்ள உதவுகிறது.*

***"இருள்வாசிக் கொடிகளால் போர்த்தப்பட்டிருந்த பந்தலுக்குக் கீழே ஒளியின் நிறம் கொண்ட அதன் பூக்கள் சிதறி கிடந்தன."** (நி. த. ப -41)*

*"விடுமுறை நாட்களில் ஓணான்களைப் பிடித்து வந்து அவற்றின் மீது மூத்திரம் பெய்து கிறுக்கு பிடிக்கச் செய்து வேடிக்கைப் பார்ப்போம். எங்களைத் துரத்தவும் முற்படும் அப்போது நாங்கள் கூச்சலிடுவோம். பிறகு எல்லோரும் அதைச் சுழ்ந்து நின்று அதிக தடிமனில்லாத ஊஞ்ச விளார்களால் அதை அடிப்போம். கடைசியில் உயிரை விடுவதைத் தவிர ஓணான்களுக்கு வேறு வழியில்லாமல் போகும். பிறகு, பிரண்டைத் துண்டுகளைக் கிளுவ முள்ளுகளால் பிணைந்து அவற்றுக்குப் பாடை கட்டுவோம். காட்டுப் புக்களால்*

அந்தப் பாடையை அலங்கரித்து, ஓணானை கிடத்தி அடக்கம் செய்வதற்காக எடுத்துக் கொண்டு போவோம். எங்களில் யாராவது ஒருவன் தன் சிலேட்டை பறையாக மாற்றி இழவு காலத்தில் மிக அச்சமூட்டும் இசையை வாசிப்பான். அந்தப் பாழ் நிலத்தின் கடைக்கோடி வரை இந்த ஊர்வலம் போகும். அங்கே இருந்த சப்பாத்திக் கள்ளிப் புதர்களின் நடுவே அவற்றை புதைத்து விட்டு வந்து குன்றினடிவாரத்தில் இருக்கும் சிறிய நீர்வீழ்ச்சியில் குளித்துவிட்டு அவரவர் வீடுகளுக்குத் திரும்புவோம்." (நி. த. பக்-121-122)

என்ற வாக்கியங்களில் வருணனை நடை பின்பற்றப்பட்டுள்ளதனை அறிய முடிகின்றது.

**நாடக உரையாடல்**

நாடக உரையாடல் என்பது, ஒரு நாடகத்தில் கதைமாந்தர்கள் பேசும் உரையாடல்கள் ஆகும். இது நாடகத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். நாடகத்தின் கதை, பாத்திரங்களின் குணநலன்கள், கதை நடப்பு ஆகியவற்றைக் கொண்டுவரும் ஒரு முக்கிய வழியாக உரையாடல் அமைகிறது.

உரையாடல் நடை என்பது, எழுதும் போது பேசும் பாணியில் எழுதுவது ஆகும். இது வழக்கமான உரைநடையிலிருந்து வேறுபட்ட ஒரு எழுத்து பாணி ஆகும். உரையாடல் பாணி எழுத்து வாசகர்களுக்குப் பேச்சு போலவே தோன்றுவதையும், அவர்களுடன் எளிதாகப் பேசுவதையும், அவர்களின் கவனத்தை ஈர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

உரையாடல் பாணி எழுத்தில், இயல்பான பேச்சு போன்ற மொழி, எளிமையான சொற்கள், கேள்விகள், நேரடி ஈடுபாடு, கதை சொல்லல் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இது ஒப்பந்தம், விதிமுறைகள், செயல்முறைகள், அல்லது தகவல் விளக்கங்கள் போன்றவற்றை எளிதாகவும், சுவாரஸ்யமாகவும் விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆசிரியர் உரையாடல் நடையைப் பயன்படுத்தியமையை,

*"அம்மாளுக்குத் தேவுலியா?*
*தேவுலீனு சொல்றாப்பல இல்லீங்க மாமா*
*ஆசுபத்திரிக்குக் கீது கூட்டிகிட்டுப் போயிப் பாத்தயா?*
*அப்பப்பக் கூட்டிக்கிட்டுப் போயிக்கிட்டுத்தே இருக்கறெ." (நி.த.ப-28)*

*"ஒடம்பு எப்படியிருக்குது காய்ச்சலா?*
*ஆமா*
*சாதாரணக் காய்ச்சல்தானே?*
*ஆமா, கிளைமேட் ஒத்துக்கல.*
*டாக்டரப் பாத்தீங்களா?*
*நாளைக்கு வருவீங்கள்ள?*
*இல்ல, ரண்டு மூணு நாள் ஆகும்.*
*சும்மா வந்துட்டுப் போங்க, ப்ளீஸ். வேல ஒண்ணும் செய்ய*
*வேண்டா" (நி. த. ப-48)*

என்ற வாக்கியங்களில் உரையாடல் நடையினை ஆசிரியர் கையாண்டிருப்பதனை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

நடை என்பது எழுதும் நெறியை அதாவது, எழுத்தாளன் தனது கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் வார்த்தைகளில் வெளிப்படுத்தும் முறையைக் குறிப்பதோடு வாசகர்களின் உள்ளத்தில் அறிவைப் பெருக்கவும், உணர்வைத் தூண்டவும், மொழிநடை மிகவும் இன்றியமையாத ஒன்றாகின்றது. வட்டார மொழியின் படைப்புகளைப் படைக்கும் போது வட்டாரத்தைச் சார்ந்த மக்களின் பேச்சு மொழி அப்படியே எடுத்தாளப்படுகின்றது. அதோடு அதில் சிறிது மாற்றமின்றி உரையாடல்கள் கொச்சைப் பேச்சு போன்றவையும் இடம்பெறுகின்றன. ஒரு சமூகத்தினரின் பேச்சு மொழியானது, சகோதரர்களை ஒட்டுமொத்தமாக இனங்கண்டுகொள்ள உதவுகின்றது. இம்மொழிநடையை வைத்தே அச்சமூகத்தவரின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றவையும் மதிப்பிடப்படுகின்றன. ஒரு படைப்பாளி தன்னுடைய படைப்பில் தான் படைக்கும் களத்தின் பேச்சு வழக்கை அப்படியே எடுத்தாளும் போது, படைப்பின் எதார்த்தம்

*வெளிப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட வட்டார மக்களின் பேச்சு மொழியை மொழிக் கலப்பை அறிந்து கொள்ள வட்டார நாவல்களில் அமைந்திருக்கும் மொழிநடை துணைபுரிகின்றது.*

**சான்றெண் விளக்கம்**

1. *முனைவர் ஜோசப் சொர்ண ராஜ் -குமரி வட்டார நாவல்களின், பின்புலம் -ப. 205*
2. *மேலது -ப -69*
3. *டாக்டர் மு வரதராசன்- இலக்கியத் திறன் -ப. 252*
4. *டி.எஸ்.சோமசுந்தரம்- தலைமுறைகள் ஓர் ஆய்வு -ப. 99*
5. *முனைவர் ஜோசப் சொர்ண ராஜ் -குமரி வட்டார நாவல்களின் பின்புலம் -ப. 160*